# விண்ணப்ப படிவம்

| | | |
|---|---|---|
| 1. பெயர் | : | |
| 2. பாலினம் | : ஆண் / பெண் /திருநங்கை | |
| 3. தகப்பனார்/ கணவர் பெயர் | : | **புகைப்படம்** |
| 4. வயது | : | |
| 5. பிறந்த தேதி | : | |
| 6. தேசிய இனம் | : | |
| 7. மதம் | : | |
| 8. இனப்பிரிவு மற்றும் ஜாதிச்சான்றிதழ்(சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும். | : | |
| 9. முகவரி | : | |
| 10 . விண்ணப்பிக்கும் பதவி | : | |
| 11. கல்வித் தகுதி | : | |
| 12. வாகன ஓட்டுநர் உரிமம் போன்ற மற்ற தகுதிகள் | : | |
| 13. விண்ணப்பதாரர் மீது முதல் தகவல் அறிக்கை(FIR) அல்லது குற்றவழக்கு நிலுவையில் உள்ளதா ? ஆம் எனில் அதன் விபரங்கள் | : | |
| 14. அலைபேசி எண்(Mobile No) | : | |
| 15. மின்னஞ்சல் முகவரி (E–Mail Id) (எதுவும் இருந்தால்) | : | |
| 16. புலனம் எண் (Whatsapp No) | | |

நான்___________________________த/க/பெ_____________________________ஆகிய என்னால் மேலே சொல்லப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மை என உறுதி கூறுகிறேன்.

விண்ணப்பதாரரின் கையொப்பம்

நாள் :

இடம் :

**குறிப்பு :** விண்ணப்பத்துடன் கல்வித்தகுதி, வயது, முகவரி மற்றும் சாதி சான்றிதழ் ஆகியவற்றிற்கான ஆவணங்களின் நகல்கள் சான்றொப்பம் செய்து அனுப்பப்பட வேண்டும். **விண்ணப்பங்கள் பதிவு தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும்.**

**<u>விண்ணப்பத்தாரர்களுக்கான அறிவுரைகள்</u>**

1. விண்ணப்பங்கள் அதற்கான படிவத்தில் பூர்த்தி செய்யப்பட்டு, பதிவு தபால் மூலமாக மட்டுமே அனுப்பப்பட வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்டு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

2.புகைப்படத்தை விண்ணப்பத்தில் அதற்கென குறிப்பிட்டுள்ள இடத்தில் ஒட்ட வேண்டும். புகைப்படத்தின் மேல்புறம் சுய சான்றொப்பமிட வேண்டும். புகைப்படத்தை விண்ணப்பத்தில் பின் அடித்து இணைக்கக்கூடாது.

3.உரிய முறையில் சுய சான்றொப்பமிட்ட தேவையான சான்றாவனங்களின் நகல்களை மட்டுமே விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும். எக்காரணம் கொண்டும் அசல் சான்றாவணங்கள் இணைக்கப்படக்கூடாது.

4.முழுவதுமாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை சுயவிலாசமிட்ட ரூ.35 க்கான அஞ்சல் வில்லைகள் ஒட்டப்பட்ட உறையுடன் இவ்வலுவலகத்திற்கு பதிவுத் தபால் மூலமாக 10.03.2023 மாலை 5.00 மணிக்குள் கிடைக்கத்தக்க அளவில் கீழே கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். 10.03.2023 அன்று மாலை 5.00 மணிக்கு மேல் வரும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. தகுதியான விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். நேர்காணல் மூலமாக மேற்கண்ட காலியிடம் நிரப்பப்படும்.

5. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய முகவரி:–

**தலைவர்,**
**மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையம்**
**வட்டார வளர்ச்சி அலுவலகம் அருகில்**
**மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம்**
**வேங்கிக்கால், திருவண்ணாமலை**
**திருவண்ணாமலை மாவட்டம். 606 604.**

6.முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் மற்றும் தவறான தகவல்கள் கொண்டுள்ள விண்ணப்பங்கள் முற்றிலும் நிராகரிக்கப்படும்.

7.விண்ணப்பத்தரார்களின் அடையாள மற்றும் இருப்பிட சான்றுக்காக கீழே குறிப்பிட்டுள்ள ஆவணங்களின் புகைப்பட நகல்களை விண்ணப்பத்துடன் இணைக்கப்படவேண்டும். (ஓட்டுநர் உரிமம், பான் கார்டு, வாக்காளர் அடையாள அட்டை, குடும்ப அட்டை, ஆதார் அட்டை)

**8. நேர்முக தேர்வு தேதி மற்றும் நேரம் ஆகியவற்றை குறுஞ்செய்தி மூலம் பின்னர் அனுப்பப்படும்.**

நாள் : 24.02.2023

இடம் : திருவண்ணாமலை.